# ஆதியாகம புஸ்தகத்திலிருந்து வெளிப்பாடுகள்

5

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# தெய்வீக வாக்குத்தத்தங்கள்

# 1



**சகோ. பிரன்ஹாம்**

செய்தி: **தீர்மானத்தின் நேரம்**, ஜூன் 11, 1959, பத்தி எண் 24-25

அது மட்டுமல்ல, எலியேசர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற போது, ஈசாக்குடைய தகப்பன் கிறிஸ்துவின் பிதாவுக்கு பிரதிநிதித்துவ மாயிருந்தான். **அவன் ஒட்டகங்களின் பரிவாரம் முழுவதுமாக மணவாட்டிக்காக நன்மையான ஈவுகளால் நிரப்பினான்**. ஓ, நான் சரியாக இப்பொழுதே பக்திபரவசப் படுகிறேன். ஓ, நான் எவ்வளவாக இயேசுவை நேசிக்கிறேன். **அவன் மணவாட்டிக்குக் கொடுக்கும்படியாக நன்மையான ஈவு களை ஒட்டகங்கள் நிறைய நிரப்பி னான்**, **அவைகள் வேறொரு சந்ததி யாருக்குரியது என்றோ அல்லது வேறொரு நாளுக்குரியது என்றோ**

**அவன் அவளிடம் ஒருபோதும் கூற வில்லை, ஆனால் அவைகள் மணவாட் டிக்காகவே இருந்தது.**

25. **அனுப்பப்பட்டிருக்கிற ஒவ்வொரு உண்மையான ஊழியக்காரனும், தான் மணவாட்டிக்குக் கொடுக்கக் கூடிய அளவில் ஒரு புத்தகம் முழு வதும் நிறைந்துள்ள தெய்வீக வாக் குத்தத்தங்களைப் பெற்றிருக்கிறான்.** நான் அதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். **அவன் அவளுக்காகக் கொடுக்கும்படி அங்கே வெகுமதிகளைப் பெற்றிருக்கிறான். அவன் அவைகளில் எதையும் கொடுக்காமல் வைத்துக் கொள்ள மாட்டான். அவன் அவைகள் ஒன்வொன்றையும் போதுமான அளவு பெற்றிருப்பான். தேவன் நம்பிக்கை வைக்கக்கூடிய ஊழியக்காரனாகிய ஒரு உண்மை ஊழியக்காரனும், ஒரு மாதிரி ஊழியக்காரனும் அவன் தான். அவன் அதை அவளிடமிருந்து**

பின்னால் மறைத்து வைக்க முயற்சிக்க மாட்டான், ஏனென்றால் அவள் வரப் போகிற மகாராணி என்பதை அவன் அறிந்திருக்கிறான்.

ஓ, அவருக்கு முன்பாக உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு எந்த நன்மையும் வழங்காதிரார். "நீங்கள் ஜெபம் பண்ணும் போது, நீங்கள் எவைகளை விரும்புகி றீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள் வீர்கள் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும். நீங்கள் என்னிலும் என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந் தால், நீங்கள் விரும்புவதைக் கேளுங் கள், அப்பொழுது அது உங்களுக்குக் கொடுக்கப்படும்." புத்தகம் முழுவதும் அதைப் பற்றியது தான். புத்தகத்திலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் உங்களு டையதாக இருக்கிறது, மணவாட்டி யாகிய உங்களுடையது.

★★★★★

# 1

## சங்கீதம் 144:15

...கர்த்தரைத்
தெய்வமாகக்
கொண்டிருக்கிற
ஜனம்
பாக்கியமுள்ளது.

2

சங்கீதம் 91:10

ஆகையால்
பொல்லாப்பு
உனக்கு
நேரிடாது, வாதை
உன் கூடாரத்தை
அணுகாது.

# 3

**யோசுவா 1:5**

...நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.

# 4

சங்கீதம் 46:1

**தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.**

# 5

## நீதிமொழிகள் 10:6

# நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்;...

# தேவனுடைய உண்மையான ஊழியக்காரன் ஒருவனைக் குறித்த என்னவொரு அழகான காட்சி



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **தீர்மானத்தின் நேரம்,** ஜூன் 11, 1959, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

எனவே ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தீர்மானத்தைச் செய்யும்படியான நேரமானது அவனுக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது, அவன் ஒரு பிரசங்கியாயிருந்தாலும், அல்லது ஒரு தீர்க்கதரிசியாயிருந்தாலும், அல்லது ஒரு சபை அங்கத்தினனாக இருந்தாலும், அல்லது என்னவாயிருந்தாலும், அவன் ஒரு தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.



13. அந்த நேரம் வந்தது, ஆபிரகாம் தன்னுடைய குமாரன் ஒரு அவிசுவாசியை விவாகம் செய்ய

விரும்பவில்லை என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

இன்று ஆபிரகாமுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாகிய கிறிஸ்தவர்களுக்கும் அது ஒரு நல்ல தீர்மானமாகும், அவர்களுடைய பிள்ளைகளைக் குறித்தும் அதே தீர்மானத்தைச் செய்வது.

இப்பொழுது, அந்த அவிசுவாசியான பெண்கள் எவ்வளவு கவர்ச்சி வாய்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் எவ்வளவு அருமையான பெண்களாக இருந்தாலும் அது எந்த வித்தியாசத்தையும் உண்டாக்குவதில்லை, ஆனால் ஆபிரகாம் அம்மாதிரியான காரியத்தோடு தன்னுடைய குமாரன் இணைக்கப்படுவதை விரும்பவில்லை.

எனவே, அவன் யாரை விவாகம் செய்ய வேண்டும் என்பதைக் குறித்து தீர்மானம் செய்ய வேண்டியிருந்த



ஒரு நேரத்தை உடையவனாய் இருக்க வேண்டியிருந்தது.

பிறகு ஈசாக்கிற்காக இந்த மணவாட்டியை தேர்ந்தெடுக்கும்படி அவன் யாரை அனுப்ப வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை அவன் செய்ய வேண்டியதாயிருந்த சமயம் வந்தது. அந்த நேரம் வந்த போது, அவன் தன்னுடைய ஊழியக்காரர்கள் எல்லாரையும் நோக்கிப் பார்த்தான்.



14. நாம் இங்கே ஆபிரகாமைக் குறித்த ஒரு அழகான பாடத்தில், பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனுக்கு ஒரு மணவாட்டியைச் சென்று கண்டுபிடிக்கும்படி ஒரு

ஊழியக்காரனைத் தேடுவதைக் குறித்துள்ள பிதாவாகிய தேவனின் முன்னடையாளமாக நாம் ஆபிரகாமைக் கற்றுக் கொள்கிறோம். அதைத்தான் பிதாவானவர் இன்று செய்து கொண்டிருக்கிறார்.

அவர் மணவாட்டிக்கு அனுப்பும் இந்தச் செய்தியை எடுத்துச் செல்லும்படி, அவர் நம்பிக்கை வைத்திருக்கிற யாரோ ஒருவரை கண்டுபிடிக்கும்படி அவர் தம்முடைய குழுவை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

எலியேசர் தான் அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவன் என்று அவன் தெளிவாக முடிவு செய்தான், ஏனென்றால் எலியேசர் ஒரு நம்பகமான ஊழியக்காரன் என்பதைக் கண்டுகொண்டிருந்தான்.

அவன் விசுவாசமுள்ளவனாகவும், உண்மையுள்ளவனாகவும், நேர்மையுடையவனாகவும், நீதிமானாகவும், கபடமில்லாதவனாகவும் இருந்தான்.



தேவன் தம்மிடத்திலிருந்து சபைக்கு ஒரு செய்தியை கொண்டு செல்ல தேர்ந்தெடுக்கக் கூடிய ஒரு ஊழியக்காரனுடைய மாதிரி இதுதான்: நீதிமானாயிருக்கிறான் என்று நிரூபிக்கப்பட்ட ஒருவனைப் போலிருத்தல். ஒரு குமாரனைத் தேர்ந்தெடுத்தல், அல்லது அவனை ஸ்தானத்தில் பொருத்துதல் என்பதன் பேரில் இங்கே சென்ற முறை கொடுக்கப்பட்ட என்னுடைய செய்தி உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? அவன் எப்படியாக முதலில் நிரூபிக்கப்பட்டு, அதன்பிறகு குடும்பத்திற்குள் புத்திர சுவிகாரம் பெறுகிறான் அல்லது அந்த ஸ்தானத்தில் பொருத்தப்படுகிறான் என்பதைப் பற்றி.

15. ஆபிரகாமுக்கு தேவையாயிருந்த வைகளை எலியேசர் நிறைவு செய்கிறவனா யிருந்தான். எலியேசர் முன்மாதிரியான ஊழியக்காரனாக சித்தரிக்கப்படுகிறான். அவன் அனுப்பப்படுவது வரை அவன் எவ்வாறு போகாமல் இருந்தான் என்பதைக் குறித்து ஆதியாகமம் 24ம் அதிகாரத்தில் நீங்கள் அந்தக் கதையை வாசித்திருக்கிறீர்கள்.

அநேகர் வெறுமனே அதைக் கொண்டு எவ்வளவு பணம் சம்பாதிக்க முடியும் என்பதற்காக செல்கின்றனர். இந்த மற்றவர்களோ தங்களுக்காக ஒரு பெரிய பெயர் பிரஸ்தாபத்தை உண்டாக்கிக் கொள்வதற்காக செல்கின்றனர். மற்றவர்கள் பிரபலமாக இருப்பதற்காக போகின்றனர். மற்றவர்கள் தங்களை மனிதனால் உண்டாக்கப்பட்ட ஏதோவொரு



ஆட்சி முறைமை (regime) அனுப்புவதன் காரணத்தினால் போகின்றனர்.

ஆனால் சிலர் தேவன் தங்களை அனுப்புவது மட்டுமாகக் காத்திருப்பார்கள். முன்மாதிரியான ஊழியக்காரன் அதைச் செய்வான்.

மேலும் கவனியுங்கள். அவன் போன போது, அவன் எங்கே அனுப்பப்பட்டானோ அங்கு மாத்திரம் சென்றான், அதிக பணமுண்டு என்ற காரணத்தினால் சிலர் இங்கே போகலாம் என்றோ, அல்லது பெரிய கூட்டம் உண்டு என்ற காரணத்தினால் இங்கே போகலாம் என்பதோ அல்ல.

அவன் எங்கே அனுப்பப்பட்டானோ மிகச்சரியாக அங்கே அவன் சென்றான்.

16. தேவன் அனுப்புகிற எந்தவிடமா யிருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் அசையும் போது, தானும் அசையும் மனிதர்களையே தேவன் இன்று தேடிக் கொண்டிருக்கிறார்.

அதுதான் முன்மாதிரியான ஒரு ஊழியக்காரன்.

அது மட்டுமல்ல, அவன் தன்னுடைய செய்திகளை பிரசங்கிக்க வேண்டிய தன்னுடைய இடத்திற்கு அவன் போன போது, அவன் தன்னை ஒருபோதும் தற்புகழ்ச்சி செய்யவேயில்லை. அவன் எவ்வளவு மகத்தானவன் என்பதைப் பற்றியோ, அல்லது தன்னுடைய கூட்டங்கள் எவ்வளவு மகத்தானதாய் இருந்தது என்பதைப் பற்றியோ, அல்லது தன்னைப் பற்றியுள்ள ஏதாவது எவ்வளவு மகத்தானதாயுள்ளது என்பதைப் பற்றியோ அவன் ஒருபோதும் பேசவில்லை.



அவன் தன்னைப் பற்றி புகழ்ந்து பேசும் ஒருவனாகவோ, அல்லது பெருமையுள்ள ஒருவனாகவோ இருக்கவில்லை. ஆனால் அவன் தன்னுடைய எஜமானைக் குறித்தும், தன்னுடைய எஜமானுடைய ஐசுவரியத்தைக் குறித்தும், தன்னுடைய எஜமானுக்கு சொந்த மான ஒவ்வொன்றிற்கும் சுதந்தரவாளியாகப் போகிற ஒரு குமாரன் தன்னுடைய எஜமா னுக்கு உண்டு என்பதைக் குறித்து மாத்திரம் பேசினான்.

தேவனுடைய உண்மையான ஊழியக் காரன் ஒருவனைக் குறித்த என்னவொரு அழகான காட்சி:



தன்னுடைய முழு கவனமும் எஜமானின் மேல் தான் இருக்கிறது, எஜமானைக் குறித்தும், குமாரனைக் குறித்துமே அல்லாமல் தன்னைப் பற்றியே ஜனங்களிடம் கூறிக் கொண்டிருக்க மாட்டான்.

அவர் எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியாகப் போகிறார். அவன் தன்னைக் குறித்தோ அல்லது தன்னுடைய– – அல்லது தன்னுடைய மகத்தான (தன்னை அனுப்பின) அதிகார குழுவினரைக் குறித்தோ, அல்லது தன்னுடைய ஸ்தாபனத்தைக் குறித்தோ அல்லது அவன் கொண்டிருக்கும் ஏதோவொரு தலைமை அலுவலகத்தைக் (affiliation) குறித்தோ புகழ்ந்து பேசும்படி அவன் நேரத்தைக் கொண்டிருக்காமல், அந்த எஜமானைக் குறித்தும், அந்த குமாரனைக் குறித்தும் பேச அதிக நேரத்தை அவன் கொண்டிருக்கிறான்.

★★★★★

# ஒரு மனிதன் எங்ஙனம் தேவனை மேற் கொள்ள முடியும்? உங்களால் முடியும். உங்களால் முடியும். ஒரு மனிதன் தேவனை மேற்கொள்ள முடியும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பதறல்

Jeffersonville, Indiana, USA

63-09-01E

---

56. கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு வேதத்தில் காணப்படும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

தொடக்கத்தில் யாக்கோபு விசாரமற்ற ஒருவனாக இருந்தான். சேஷ்டபுத்திரபாகம் அவனுக்கு மிகவும் முக்கியமானது என்று அவன் மனதில் எண்ணம் கொண்டான். அதை எந்த வழியிலாகிலும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அவன் முயன்றான். அதைப் பெற்றுக் கொண்ட பின்னர் எல்லாமே சரியாயிற்று என்று அவன் நினைத்தான். ஏசா மான் வேட்டையாடிவிட்டு களைப்பாக வந்தான். அவனுக்கு அதிக பசி உண்டாயிற்று. ஒரு பெரிய பானை நிறைய கூழ் அவனுக்கு தேவைப்பட்டது. அதைக் கண்டபோது, நாள்

முழுவதும் நடந்து களைத்துப்போய் பசியுற்றி ருக்கும் ஒரு மனிதனுக்கு மிகவும் சோதனை யாக இருந்திருக்கும், அவன் தன் சகோதர னாகிய யாக்கோபிடம், "நான் மயக்க நிலை யில் இருக்கிறேன். இதில் எனக்குக் கொஞ்சம் தா" என்று கெஞ்சினான்.



யாக்கோபு, "நீ எனக்கு சேஷ்ட புத்திர பாகத்தைத் தருவதாக ஆணையிட்டுக் கொடுத் தால் நான் தருவேன்" என்றான். பாருங்கள்? எந்த வழியில் அதைப் பெற்றாலும் அவனுக் குக் கவலையில்லை. எனவே அவன் அதைப் பெற்றுக் கொண்டான். சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு எல்லாமே முடிவுற் றது என்று அவன் நினைத்தான். (சகோ.

பிரான்ஹாம் பீடத்தை நான்கு முறை தட்டு கிறார் – ஆசி).

57. பெந்தெகொஸ்தேயினரே, அங்கு தான் நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள். தேவனுடைய ஆவியினால் நீங்கள் மறுபடியும் பிறந்துவிட்டீர்கள். சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்டீர்கள் என்பதால் எல்லாமே முடிவுற்றது என்று எண்ணம் கொண்டீர்கள். அது தொடக்கம் தான். அது தொடக்கம் தான். "அவருக்குச் செவி கொடுங்கள்" என்னும் செய்தி உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்த பிறகு அது மகனாக வளர்கிறது. அதற்கு பிறப்புரிமை உண்டு. ஆனால் குழந்தையிலிருந்து அது பயிற்சி பெற்று, நிரூபிக்கப்பட வேண்டியதா யுள்ளது. அவன் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதவன் என்று நிரூபிக்கப்பட்டால், அவன் சுதந்தரவாளியாக முடியாது. தகப்ப னுடைய வேலையில் அவன் சிரத்தை காண் பிக்காமல் போனால் அவன் சுதந்தரவாளியாக முடியாது.

அது போன்று, பரிசுத்த ஆவி பெந்தெகொஸ்தே மக்களின் மீது விழுந்த போது, அவர்கள் ஆவியின் வரங்கள் போன்றவைகளை மீண்டும் பெற்றுக் கொண்டனர். அவர்கள் ஆவியினால் மறுபடியும் பிறந்த காரணத்தால், எல்லாம் முடிவடைந்துவிட்டது என்று நினைத்துக் கொண்டனர். ஆனால் மகன் அவனுடைய ஸ்தானத்தில் பொருத்தப்பட வேண்டியவனாயிருக்கிறான். அவன் தகப்பனுக்கு உண்மையாயிருப்பான் என்று நிரூபிக்கப்பட்ட பின்னர், அவன் பொதுவான ஸ்தலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அவனுடைய அங்கி கழற்றப்பட்டு, வேறொரு அங்கி அவனுக்கு உடுத்துவிக்கப்படும், அதன் பின்னரே அவன் மகனாக நியமிக்கப்பட்டு அவன் தகப்பன் பெற்றுள்ள அனைத்திற்கும் சுதந்திரவாளியாகிறான்.

58. தேவன் அதைதான் தமது குமாரனுக்கு மறுரூப மலையின் மேல் செய்தார். அவர் ஒரு மேகத்தினால் நிழலிடப்பட்டு மறுரூபமானார். அவருடைய வஸ்திரம் சூரியனைப் போல் வெண்மையாயிற்று. ஒரு சத்தம், “இவர்

என்னுடைய நேசக் குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். மோசேயும் நியாயப்பிர மாணமும் தவறின. இதுதான் இவர். இவருக் குச் செவி கொடுங்கள்” என்றது. அவர் குமாரன் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டார். பாருங்கள்?



The Transfiguration by Carl Bloch

59. சேஷ்ட புத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்டதனால் எல்லாமே முடிந்துவிட்டது என்று யாக்கோபு கருதினான். பெந்தெகொஸ்தே மக்களும் அவ்வாறே கருதி, தங்களை ஸ்தாபித்துக் கொள்ள ஆரம்பித்தனர். ஒருத்துவம், திரித்துவம் போன்ற எல்லா வித ஸ்தாபனங்களும் உண்டாகி, ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டு, அதன் மூலம் அவர்களிடம் 'அடையாளம்' (Token) காணப்படவில்லை என்பதை நிரூபித்தனர். அவர்களிடையே குரோதம், விரோதம் சண்டை... பாருங்கள்? அவர்கள் அங்குதான் சென்றுவிட்டனர்.

யாக்கோபு அப்படித்தான் நினைத்தான். ஆனால் அவனுடைய ஜீவனைக் குறித்த பயம் ஓரிரவு அவனுக்குள் குடி கொண்டது, அவன் பதறல் கொண்டான். "என்னைக் கொன்று போட ஆற்றின் அக்கரையில் என் சகோதரன் காத்துக் கொண்டிருக்கிறான்" என்னும் நினைவு அவனைக் கலங்கடித்தது. அவன் பெற்றுக் கொண்ட அந்த சேஷ்ட புத்திரபாகமே. அவன் உயிரிழக்க காரணமாயிருக்கும் போலிருந்தது.

அவ்வாறே, நீங்கள் எந்த பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு மறுபடியும் பிறந்தீர்களோ, நீங்கள் கவனமாயிராமற் போனால், அதே பரிசுத்த ஆவி உங்களை முடிவில் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தும். அது உண்மை. நோவாவைக் காப்பாற்றின அதே தண்ணீர்தான் உலகத்தை நியாயந்தீர்த்தது. நீங்கள் 'மத வைராக்கியம்' (Fanaticism) என்றழைக்கும் அதுவே உங்களை உங்கள் வாழ்க்கையின் இறுதியில் குற்றப்படுத்தும்.



60. அவன் வாழ்க்கை முடிவடையப் போகிறது என்று யாக்கோபு அறிந்தான். அவன் சகோதரன் அவனைச் சந்திக்க

நானூறு ஆட்களுடன் புறப்பட்டு வருகிறான் என்னும் செய்தியை ஒருவன் கொண்டு வந்தான். திகில் அவனைச் சூழ்ந்தது. அவன் ஒரு மனிதனை காளைகளுடனும், ஆடுமாடு களுடனும் முன்னால் அனுப்பி, அவனுடைய சகோதரன் ஏசாவுக்கு சமாதான காணிக்கை யளிக்க விரும்பினான். அதன்பின்பு அவன் குழுக்களை ஒன்றன் பின் ஒன்றாக அனுப்பி, அவன் கோபத்தைத் தணிக்க முயன்றான். "இவையாவும் அவன் கோபத்தைத் தணிக்காது. ஒருக்கால் அவன் என்னைக் காட்டிலும் ஐசுவரியவானாயிருக்கலாம். இதெல்லாம் அவனுக்குத் தேவையிருக்காது" என்றும் அவன் நினைத்தான். அவன் தனது மனைவி களையும் பிள்ளைகளையும் ஏசா காணும்படி முன்னால் அனுப்பினான்; நிச்சயமாக ஏசா தன் மருமக்களைக் கொல்லமாட்டானென்று நினைத்தான். இருப்பினும் அவனால் ஒன்றும் முடியவில்லை. ஒரு மனிதனை எப்படி பிடிக்க வேண்டுமென்று தேவனுக்கு தெரியும். யாக்கோபு ஆற்றைக் கடந்தான். அங்கு அவன் முழங்காற்படியிட்டான். அதற்கு முன்பு

சற்று நாணமுள்ளவனாக இருந்தான். 'யாக்கோபு' என்பதற்கு 'எத்தன்' என்று பொருள்; அவன் எத்தனாக இருந்தான். ஆனால் ஏதோ ஒன்று அவனுக்கு சம்பவிக்க வேண்டியதாயிருந்தது. அவனுக்கு முன்பாக மரணம் படுத்துக்கிடப்பதை அவன் கண்ட போது, அவன் பதறினான்.



61. இங்கு அமர்ந்திருக்கும் அநேக ஆண்கள், பெண்கள் முன்னிலையில் மரணம் ஒருக்கால் படுத்துக் கிடக்கலாம். அதை அகற்ற வேண்டுமானால், அதற்கான ஒரே வழி பதறல் கொண்டு அவரிடம் வருதலேயாகும். "இன்றிரவு அதை நான் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்பொழுதே பெறவேண்டும். இல்லையேல் எனக்கு விமோசனம் இல்லை". நாளை என்றால் தாமதமாகியிருக்கும். இப்பொழுதே அதை நான் பெற்றுக் கொள்ளவேண்டும் நீங்கள் அடையாளமாகிய பரிசுத்த ஆவியின்

அபிஷேகத்திற்காக ஜெபம் செய்யும்போது, "ஆண்டவரே, நான் சென்று முயற்சி செய் வேன். ஆனால் எனக்கு சிறிது களைப்பாயுள் ளது" என்று கூறாதீர்கள். அப்படியானால் நீங்கள் உங்கள் இருக்கையிலேயே அமர்ந்து கொண்டு. எவ்வித முயற்சியும் செய்ய வேண்டாம். "நான் ஜெப வரிசையில் சென்று எண்ணெயை என் தலையில் பூசிக் கொள் வேன். அதனால் ஏதாவது உபயோகமுண்டா என்று பார்க்கலாம்" என்று கூறுவீர்களானால் அந்த பதறும் நிலைக்கு வரும் வரைக்கும் உங்கள் இருக்கைகளிலேயே அமர்ந்திருப்பது நல்லது. மரணத்துக்கும் ஜீவனுக்குமிடையே யுள்ள அந்த பதறும் நிலைக்கு முழு சபையுமே வரவேண்டும். இப்பொழுதே பெற்றுக் கொள்ள வேண்டும்; இல்லையேல் மடிந்து போக வேண்டும் என்னும் நிலைக்கு நீங்கள் வரும் போது, தேவன் அங்கு வந்து கிரியை செய்கிறார். தேவனை அங்கு கொண்டு வருவதற்கு பதறல் அவசியமா யுள்ளது.

62. யாக்கோபு என்றும் இல்லாத அளவுக்கு கதறினான். அவன் தேவனைப் பிடித்துக் கொள்ளும் வரை, அவனுடைய கலக்க நிலையில் அவரை கூப்பிட்டான். பதினைந்து நிமிடங்கள் மாத்திரம் அவன் அவருடன் போராடவில்லை; அவரைத் தன் ஆத்துமாவில் இருத்திக் கொள்ள அன்றிரவு முழுவதும் அவருடன் போராடினான். அப்படி செய்தும் கூட அவன் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றுணர்ந்தான். ஆசீர்வாதம் பெறும் வரை அவன் அவரை இறுகப் பற்றிக் கொண்டான்; அதுவரை அவன் அவருடன் தீவிரமாய் போராடினான். கர்த்தர் அங்கு வந்தார். அவன், "நான் உம்மைப் போகவிடமாட்டேன்" என்று கலக்க நிலையில் அவரிடம் கூறினான். அப்பொழுது அவன் மேல் ஆசீர்வாதம் இறங்குவதை அவன் உணர்ந்தான்... அநேகர், "தேவனுக்கு மகிமை, நான் இப்பொழுது பெற்றுக் கொண்டுவிட்டேன்" என்கின்றனர். நீங்கள் அங்குதான் ஏமாந்து விட்டீர்கள் ஆமாம்!

சிலர் சகோ. பிரான்ஹாமே, “எனக்கு நல்லுணர்வு தோன்றுகிறது. நான் அங்கு ஜெபித்தேன். ஒரு நடுக்க உணர்ச்சி எனக்குள் தோன்றினது...” என்கின்றனர். ஒருக்கால் அது தேவனாயிருக்கலாம். “எனக்கு முன்னால் ஒரு பெரிய வெளிச்சத்தைக் கண்டேன்” எனலாம். அதுவும் ஒருக்கால் தேவனாயிருக்கலாம். ஆனால் அதைக் குறித்து இப்பொழுது நான் கூற வரவில்லை.



63. எபிரேயர் 6-ம் அதிகாரத்தில் வேதம், “மழை நீதியுள்ளவர் மேலும் அநீதியுள்ளவர் மேலும் பொழிகின்றது” என்று கூறுகிறது

(மத்.5:45 - தமிழாக்கியோன்). (சகோ. பிரான்ஹாம் பீடத்தை ஏழு முறை தட்டுகிறார் - ஆசி) நீங்கள் கோதுமையையும் களை யையும் வயலில் வையுங்கள். உண்மையில் மழை கோதுமைக்காகவே அனுப்பப்படுகின்றது. ஆனால் அது களைகளின் மேலும் விழுகின் றது, மழை பெற்றதனால், கோதுமை பயிர் போலவே களைகளும் மகிழ்ச்சியடைகின்றன. அதே பரிசுத்த ஆவி அவிசுவாசியின் மேலும் விழுந்து, விசுவாசியைப் போலவே அவனை நடக்கச் செய்யும். ஆனால் அவர்களுடைய கனிகளினால் அவர்கள் அறியப்படுகின்றனர். அதைக் குறித்துதான் நான் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறேன்; அதுதான் 'அடையாளம்' (Token)

64. யாக்கோபு பதறல் கொண்டு, "நான் உம்மைத் தொட்டு உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன். நீர் என்னோடு இருக்கிறீர். ஆனாலும் நான் உம்மைப் போகவிடமாட்டேன்" என்றான். சிலர் முதல் உணர்ச்சி தோன்றினவுடனே நல்லது என்று நினைத்து, மேலும் கீழும் குதித்து, பீடத்திற்குச் செல்லும் வழியில் ஓடி, "நான்

பெற்றுக் கொண்டேன். நான் பெற்றுக் கொண்டேன்'' என்கின்றனர். ஓ, இல்லை, இல்லை! அவனை வித்தியாசமான ஆளாக்க ஏதோ ஒன்று நிகழும் வரைக்கும் அவன் அதிலே நிலைத்திருந்தான். அவன் மேற்கொள் ளும் வரை அதில் நிலை நின்றான் என்பதாக வேதம் கூறுகின்றது. ஒரு மனிதன் எங்ஙனம் தேவனை மேற்கொள்ள முடியும்? உங்களால் முடியும். உங்களால் முடியும். ஒரு மனிதன் தேவனை மேற்கொள்ள முடியும்.

★★★★★

*குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. நன்றி.*

# யோசேப்பு தன் பிதாவினால் சிநேகிக்கப்பட்டான்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஷாலோம், ஜனவரி 12, 1964, சியராவிஸ்டா, அரிசோனா, அமெரிக்கா

153. யோசேப்பைப் பாருங்கள், அவனுடைய சகோதரர்களாகிய கோத்திரப் பிதாக்களின் மத்தியில் அவன் பிறந்தான்,



அவனே எல்லோருக்கும் இளையவன் (இல்லை, இளையவனுக்கு முந்தினவன்; பென்யமீன் தான் எல்லோருக்கும் இளையவன்). இளையவனுக்கு முந்தினவன் அவன் தன் சகோதரரால் வெறுக்கப்பட்டு, தன் பிதாவினால் சிநேகிக்கப்பட்டான்.



அவன் ஆவிக்குரியவனாயிருந்தபடியால் வெறுக்கப்பட்டான். அவனுக்கு சொப்பனங் களின் அர்த்தத்தைக் கூற முடிந்தது. அவை சரியாக இருந்தன.

அவனால் தரிசனங்களைக் கண்டு, வரப்போகும் சம்பவங்களை முன்னறிவிக்க முடிந்தது. அவர்கள் அவனை வெறுத்தனர்.

அவன் முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான்.



154. அவர்கள் ஏன் இயேசுவை வெறுத்தனர்? அவர்கள் அவரை பெயெல்செபூல் என்று அழைத்தனர். ஏனெனில் அவர் வார்த்தையாயிருந்தார், வார்த்தையானது இருதயங்களில் மறைந்துள்ள சிந்தனைகளை அறிந்து கொள்ளும்.

அவர்கள் அவரை வெறுத்தனர். அவர்கள் அவரை முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றனர்.



155. யோசேப்பு மரித்துப்போனான் என்று நினைத்து அவனுடைய சகோதரர்கள் அவனைக் குழியில் எறிந்தனர்.

இரத்தம் தோய்ந்த அவனுடைய அங்கி அங்கே விடப்பட்டது - இயேசுவின் மரணத்தை அடையாளம் கண்டு கொள்வதற்காக அவர் அணிந்திருந்த அந்த இரத்தம் தோய்ந்த அங்கி விடப்பட்டது போல,



ஆனால் தேவன் யோசேப்புக்கு என்ன செய்தார்? அவர் அவனைக் குழியிலிருந்து வெளியே கொண்டு வந்து, பார்வோனின் வலது பாரிசத்தில் உட்காரவைத்தார்.

யாரும் பார்வோனைக் காண முடியாது, யோசேப்பைத்தான் காணமுடியும்.

யோசேப்பு அரண்மனையை விட்டு வெளியே வந்த போது, எக்காளங்கள் முழங்கின. "யோசேப்பு வருகிறார், முழங்கால் யாவும் முடங்கட்டும்" என்னும் பிரகடனம் செய்யப்பட்டது.



156. அதேதான் இயேசுவும். அவர் ஒரேயடியாக மரித்துப் போய் விட்டார் என்று கருதி அடக்கம் பண்ணப்பட்டு குழியிலிருந்து அவர் உயிரோடே வெளியே எடுக்கப்பட்டு, இப்பொழுது மகிமையுள்ளவரின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்.

"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்".

அவர் அங்கிருந்து புறப்பட்டு வரும் போது, எக்காளங்கள் முழங்கும், முழங்கால்

யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்.

பாருங்கள், அவர் செழிப்பின் ராஜகுமாரன். அப்பொழுது எகிப்து என்ன செய்ததென்று பாருங்கள், பஞ்சம் வந்தபோது, அது முழு உலகத்தையும் காப்பாற்றினது.



மனுஷகுமாரனின் வருகையின் போதும் அவ்வாறே இருக்கும். முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும், நாவுகள் யாவும் அவர் கர்த்தரென்று அறிக்கை பண்ணும்.

★★★★★

# செய்தி: சிறந்த வேலைப்பாடு,

Jeffersonville, Indiana, USA, 64-07-05

58. அதன் பின்பு யோசேப்பில் நாம் காண்கிறோம். யோசேப்பு விசித்திரமாகப் பிறந்த ஒரு பையன். அவன் தான் எல்லாரிலும் இளையவன்.

சிறந்த வேலைப்பாடாகிய சிற்பம் கட்டப்படுவதற்கென உண்டாக்கப்பட்ட அஸ்திபாரத்தின் மேல் பாகம் அவன்.

அது விசுவாசத்தில் தொடங்கி, அன்பு, கிருபை வழியாய் வந்து, பரிபூரணத்தையடைகின்றது. அவ்வாறே அது

சிற்பத்தின் காலில் தொடங்கி, கிறிஸ்துவின் பரிபூரணமடைகின்றது.

அவர் எவ்வாறு யோசேப்பில் முன்னடையாளமாக இருந்தார் என்பதைக் கவனியுங்கள். யோசேப்பு தான் அஸ்திபாரத்தின் மேல் பாகம்.

அவர்கள் அனைவரிலும் அவன் பரிபூரணமானவன். சட்டப்படி விவாகம் செய்த ஸ்திரிக்கு – யாக்கோபின் மனைவிக்கு – யோசேப்பு பிறந்தான்.

அவன் பிறந்தபோது, அவனுடைய பிதா அவனை சிநேகித்தார். ஆனால் அவனுடைய சகோதரரோ அவனை முகாந்தரமின்றிப் பகைத்தனர்.

அவனை ஏன் அவர்கள் பகைத்தனர்? ஏனெனில் அவன் வார்த்தையாயிருந்தான். அஸ்திபாரமே என்னவென்று பார்த்தீர்களா?

அஸ்திபாரத்தின் மேல் பாகம் எப்படி வருகிறது என்று பாருங்கள். சரீரத்தின் தலையும் எப்படி அமைகிறது என்று கவனியுங்கள்.

மணவாட்டியின் தலை வருவதைக் கவனியுங்கள். பார்த்தீர்களா? யோசேப்பு வார்த்தையாயிருந்தான். அவன் தரிசனம் காண்கிறவனாயிருந்தபடியால், அவனுடைய சகோதரர்கள் அவனைப் பகைத்தனர்.



அவன் காரியங்களை முன்னறிந்து, அவர்களிடம் முன்னுரைத்தான். அவன் கூறினவை நிறைவேறின. அது எவ்வளவு காலதாமதமானாலும், அவை அப்படியே நிறைவேறின.

அவன் ஆவிக்குரியவனாயிருந்தபடியால், அவனுடைய சகோதரர்கள் அவனைப் புறம்பாக்கிப் போட்டனர். உண்மையில்

அவர்கள் அவனை நேசித்திருக்க வேண்டும். ஆனால் அவன் தீர்க்கதரிசியாயும் ஆவிக்குரியவனாயுமிருந்தபடியால், அவர்கள் அவனைப் பகைத்தனர்.

59. கவனியுங்கள், அவன் ஏறக்குறைய முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டு, குழியிலே போடப்பட்டு, மரித்துப் போனான் என்று கருதப்பட்டான். அவனோ குழியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டான்.



சிறையில் அவன் சோதனை நேரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தபோது, அங்கு பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் இருந்தனர்.

பானபாத்திரக்காரன் இரட்சிக்கப்பட்டான், ஆனால் சுயம்பாகியோ கைவிடப்பட்டான் என்பதை நாம் அறிவோம்.



அவ்வாறே கிறிஸ்துவின் சிறையாகிய சிலுவையிலும் ஒருவன் இரட்சிக்கப்பட்டான். மற்றவன் கைவிடப்பட்டான் – இரு கள்ளர்கள், இரு குற்றவாளிகள்.



அவன் சிறையிலிருந்து எடுக்கப்பட்டு பார்வோனின் வலது பாரிசத்தை அடைகிறான். யாரும் பார்வோனிடம் பேச முடியாது. யோசேப்பின் மூலமாகவே பேச வேண்டும்.

யோசேப்பு பார்வோனின் சிங்காசனத்தை விட்டு வெளியே வந்தபோது, எகிப்து முழுவதிலும் எக்காளம் தொனித்து, “எல்லோரும் முழங்காற்படியுங்கள், யோசேப்பு வருகிறார்” என்று அறிவித்தது!

60. இயேசுவுக்கும் அவ்வாறே நிகழும். அவரும் எவ்வளவாய் பிதாவினால்

சிநேகிக்கப்பட்டு, தமது ஸ்தாபன சகோதரர்களால் முகாந்தரமின்றி பகைக்கப்பட்டார்!

அவர் சரியாக முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டார். அவர் ஒரேயடியாக மரித்துவிட்டாரென்று எண்ணி அவரைக் குழியில் (கல்லறையில் தள்ளினார்கள்).

சிலுவையில் ஒருவன் கைவிடப்பட்டான். மற்றவன் இரட்சிக்கப்பட்டான். அவர் சிலுவையிலிருந்து உயர்த்தப்பட்டு இராஜ கெம்பீரத்தில், அவரில் பிரதிபலித்த அந்த மகத்தான ஆவியாயிருக்கிற தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

இயேசுவின் மூலமேயன்றி எவரும் தேவனிடத்தில் பேச முடியாது. யோசித்துப் பாருங்கள்!

அவர் சிங்காசனத்தை விட்டுப் புறப்பட்டு வரும்போது, எக்காளம் தொனிக்கும். அப்பொழுது முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்...

யோசேப்பு செழிப்பின் குமாரனாயிருந்தான் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்.

அவன் செய்த அனைத்தும் செழித்தோங்கின். அது சிறையானாலும், வேறெங்கானாலும், எல்லாம் சிறப்பாக அமைந்தன. அதுபோன்று, தேவனும், தமது பிள்ளைகளுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்குமென்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் அல்லவா?

அது வியாதியாயிருந்தாலும் சரி, சிறையாயிருந்தாலும், மரணம், துயரம் எதுவாயிருப்பினும், அவரில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்.

அவர் அங்ஙனம் வாக்களித்துள்ளதால், அது அவ்வாறே நிறைவேற வேண்டும். அவருக்குள் அது மறைபொருளாக நமக்குப் பேசப்பட்டுள்ளது.

அவரே தேவனின் பரிபூரண சாயலாயிருந்தார்.

அவர் மறுபடியுமாக வரும்போது நாம் பார்க்கிறோம்...

61. ஞாபகமிருக்கட்டும், வெளிப்பாட்டின் மூலம் பெற்ற தன் மகத்தான தீர்க்கதரிசனத்தின் மூலமாய், யோசேப்பு உலகை அழிவினின்று காத்தான்.

யோசேப்பு இல்லையென்றால் உலகம் அழிந்து போயிருக்கும். அது போன்று, இயேசு இல்லையென்றால், இவ்வுலகம் அழிந்து போயிருக்கும், "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16). தேவன் ஜீவனைப் பாதுகாக்கிறார்.

62. இப்படி நாம் சொல்லிக்கொண்டே போகலாம். அவர் தாவீதுக்கு பொருத்தமானவராய் இருந்தார்.

அவர் மோசேக்குப் – பொருத்தமானவராய் இருந்தார்.

அவர் எலியாவுக்குப் பொருத்தமானவராய் இருந்தார்.

அவர் எலிசாவுக்கு பொருத்தமானவராக இருந்தார்.

அவர் யோசேப்புக்கு பொருத்தமானவராய் இருந்தார்.

அவர்கள் ஒவ்வொருவரும் பழைய ஏற்பாட்டில் அவரைச் சித்தரிக்கிறவர்களாகத் திகழ்ந்து, அவரைக் குறித்து முன்னறிவித்து, அவரில் பிழையின்றிப் பொருந்தினார்கள்.

அது என்ன? அது வரப்போகிற பரிபூரணமான மீட்பரை முன்னறிவித்து, சலவைச் சாலையில் நமது அழுக்குத் துணிகளைக் கொடுத்து விட்டு, அதை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறிவிக்கின்றது.

அது ஆட்டுகுட்டியானவருடைய இரத்தத்தினால் கழுவப்படுகின்றது. நமக்குச் சொந்தமானவைகளை நாம் உரிமை கோரி பெற்றுக் கொள்ளலாம்.

அவர் எதற்கெல்லாம் மரித்தாரோ, அவை அனைத்தையும் நாம் மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆகவே அவர் சித்தரிக்கப்பட்ட பரிபூரண வார்த்தையாயிருந்தார்.

★★★★★

*குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. நன்றி.*

# யோசேப்பை பாருங்கள்; அவன் உனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறான்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: தானியேலை காபிரியேல் சந்தித்ததன் ஆறு விதமான நோக்கங்கள் *61-0730* E

யோசேப்பு, தான் உயர்த்தப்படுவதற்கு முன்பாக, அவன் சோதனைக்குள்ளானான். அவன் நிரபராதியாயிருந்தும் சிறையில் அடைக்கப்பட்டான் என்பதை நினைவு பாருங்கள்.

எகிப்திய தேசத்தின் அதிபதியான போத்திபார் என்பவன் எங்கோ வெளியூருக்குப் போய்விட்டான். அவனுக்கு ஒரு

அழகிய மனைவி இருந்தாள். அவனது மனைவி யோசேப்பை வீட்டுக்குள் வந்து பார்க்கத்தக்கதான ஒரு வேளையை அவனுக்குக் கொடுத்தாள். அந்த நேரத்தில் பார்த்து, யோசேப்பு தவறான காரியத்தை செய்யும்படி செய்ய முயற்சித்தாள். அவனோ தேவனுக்கு உண்மையாயிருந்தான். நான் உங்களுக்கு கூறுகிறேன், அவர்கள் எப்பொழுதும்...





ஸ்திரீகளே, நான் எப்பொழுதும் உங்களைக் குறித்து சப்தமிட்டுக் கடிந்து கொள்வதுண்டு. இப்பொழுது இன்னும் ஒரு நிமிட நேரத்தில் உங்கள் சார்பாகப் பேசப்போகிறேன். ஸ்திரீயானவள் எப்பொழுதும் ஒரு பெலவீன பாத்திரமாய் இருக்கிறாள். ஒரு கெட்ட ஸ்திரீ இருக்காமல்

இருக்கும்போது, அப்போது ஒரு கெட்ட மனிதனும் இருக்கமாட்டான் என்பதை நான் அறிவேன். ஆனால் அதை அறிந்திருக்கிற மனிதனே, நீ ஒரு தேவனுடைய குமாரன் என்பதை அறிந்திருக்கிறாய், அப்படியிருந்தும், ஸ்திரீயின் பெலவீனத்தை சாதகமான எடுத்துக்கொண்டால் அதற்காக நீ தலை குனிய வேண்டும். அவள் என்ன செய்கிறாள் என்பது காரியமல்ல, அவள் ஒரு பெலவீன பாண்டம், நீ அதை அறிவாய். ஸ்திரீக்குரிய இலட்சணத்தோடு அவள் நடந்துகொள்ளாவிடில் அவள் கையைப் பிடித்து அவளை

சகோதரியாகப் பாவித்து, அவளோடு பேசு. நீ ஒரு தேவகுமாரனாயிருக்கிறாய். அவர்களுக்கு நீ பொல்லாங்கான காரியங்களைக் செய்ய வேண்டாம். யோசேப்பை பாருங்கள்; அவன் உனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறான்.

அத்தேசத்திலேயே மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த அந்த கனம் பொருந்திய ஸ்திரீயாகிய போத்திபாரின் அவ்வழகிய மனைவியானவள், அவனை கெஞ்சினாள், அவனைத் தூண்டினாள், அவனோ விலகிபோனான். அவள் அவனைப்

பிடித்திழுத்து தன்னோடு தழுவிக் கொள்ளும்படி செய்ய முயற்சித்தாள்; அவனோ அவளிடத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான்.



அவள் பிடியிலிருந்து வலுவாக அவன் தன்னை இழுத்துக்கொண்டபோது, அவனது மேலாடை கூட அவனை நழுவி விடும் அளவுக்கு ஆகி விட்டது; இப்படியாக அவன் அவளை விட்டு விலகி ஓடிப்போனான். ஆம் ஐயா!

அவள் கணவன் வந்தபோது, அவனிடம், அவன் அவளை கெடுக்க வந்ததாகவும், தன்னுடைய மேலாடையைக் கூட தன்னிடத்தில் விட்டு விட்டு ஓடிப்போனான் என்றும் அவர்கள் பொய் கூறினார்கள்.

~ 9 ~



அதனால் அவன் சிறைசாலைக்கு போகும்படி நேர்ந்தது. ஆனால் அவர்கள் அவனை எங்கு போட்டிருந்த போதிலும் தேவன் அவனோடு அச்சிறைச்சாலையில் இருந்தார். அவன் அந்த செழிப்பின் குமாரனுக்கு முன்னடையாளமாயிருந்தான்.

★★★★★





Only believe,
Only believe
All things are possible,
Only believe.

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242, 9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in